02.06.2022

C.C.No.457/2013

PW1. திருமதி பேபி

சாட்சி நீதிமன்றத்தில் ஆஜரானார். சத்தியபிரமாணம் செய்யப்பட்டது

முதல் விசாரணையின் தொடர்ச்சி-

எனது மகளின் திருமண அழைப்பிதழ் அசாஆ 1 ஆகும். எனது மகளின் திருமண புகைப்படங்கள் அசாஆ 2-ன் வரிசையில் 1 மற்றும் 2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை-

என்னை போலீசார் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். எந்த தேதியில் விசாரித்தார்கள் என்று எனக்கு நியாபகமில்லை. எனது மகளின் முதல் திருமணம் 1வது எதிரி செல்வனுடன் 2010 ஆம் வருடத்தில் நடந்தது. தேதி மாதம் நியாபகமில்லை. எதிரிகளிடம் பணம் கொடுக்கும் போது நான் உடன் செல்லவில்லை. நான் பணம் கொடுக்கும்போது உடன் செல்லாததால் அந்த பணத்தை யாரிடம் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது மகள் 1வது எதிரியுடன் 2 மாதங்கள் சேர்ந்து வாழ்ந்தார். பின்னா் 1வது எதிரி வெளிநாடு சென்றுவிட்டார். அவர் வெளிநாடு செல்லும்போது எனது மகள்தான் வழியனுப்பி வைத்தார் என்றால் சரிதான். 1வது எதிரி வெளிநாட்டிற்கு சென்றபின் 2 வருடத்திற்கு பின்னர் சொந்த ஊர் வந்தார். 1வது எதிரி வெளிநாடு செல்லும்போது எனது மகள் 1வது எதிரியின் வீட்டில் இருந்தா். எனது மகள் திருமணமாகி 1வது எதிரி வீட்டிற்கு செல்லும் முன்னர் அவரது 2 சகோதரிகளுக்கு திருமணம் ஆகிவிட்டது. 1 சகோதரிக்கு திருமணம் ஆகவில்லை. 1வது எதிரியின் இளைய சகோதரிக்கு திருமணம் ஆகவில்லை, அவரது பெயர் கலா. எனது மகளுக்கு திருமணம் ஆகும் முன்பே 1வது எதிரியின் சகோதரிகளுக்கு திருமணம் ஆகி அவர்கள் அவரவர்

கணவர் வீட்டில் வாழ்ந்து வந்தார்கள் என்றால் சரியல்ல. எந்த தேதியில் வெளிநாடு சென்ற 1வது எதிரி ஊருக்கு திரும்பி வந்தார் என்று எனக்கு தெரியாது. எனது மகள் அவரது கணவரான 1வது எதிரி வெளிநாடு சென்ற பின்னா் 2-3 நாள்கள் கழித்து எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டார். 1வது எதிரி வெளிநாடு சென்ற பின்னர் திரும்ப வரும்வரை எனது மகள் மாமியார் வீட்டிற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. அதன் பிறகு அடிக்கடி எனது மகள் மாமியார் வீட்டிற்கு சென்று வந்தார். 1வது எதிரி வெளிநாட்டில் இருந்து வந்த பிறகு 5 நாள்கள் கழித்து எனது வீட்டிற்கு வந்து எனது மகளை அடித்து கொடுமை செய்தார். ஆனால் அவர் அவரது வீட்டிற்கு அழைத்து செல்லவில்லை. எனது மகளை எனது வீட்டில் வைத்து 1வது எதிரி அடித்த விவரம் எனது வீட்டின் அக்கம் பக்கத்தில் இருந்தவர்களுக்கு தெரியும். வெளிநாட்டில் இருந்து 1வது எதிரி வந்த பிறகு 1வது எதிரி எனது வீட்டிற்கு வந்து எனது மகளை அடித்து கொடுமைபடுத்திய விவரத்தை நான் போலீசார் விசாரணையில் சொன்னேன். எனது மகளை 1வது எதிரி அடித்தால் போலீசில் புகார் அளித்தோம். நான் குளச்சல் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் மனு அளித்தேன். போலீசார் ரசீது கொடுத்தார்களா என்று எனக்கு ஞாபகமில்லை. எனது மகளுக்கு 1வது எதிரி அடித்ததில் வெளிகாயங்கள் இல்லை, உள் காயங்கள் உண்டு. நாங்கள் ஊர் பெரியவர்கள் முன்னிலையில் சமாதானம் பேசினோம். நான் ஊர் பெரியவர்கள் முன்னிலையில் சமாதானம் பேசிய விவரத்தை போலீசா் விசாரணையில் சொல்லவில்லை. எதிரிகள் கருங்கல் காவல் நிலையத்தில் எனது மகள் அடியாள்களுடன் சென்று எதிரிகள் வீட்டில் தகராறு செய்ததாக புகார் அளித்திருந்தார்கள், அந்த விசாரணைக்கு நான் சென்றிருந்தேன். நான் மேற்படி செல்வது சரியல்ல என்றாலும் 1வது எதிரி தன்னை எனது மகளுடன் சேர்த்து வைக்குமாறு கருங்கல் காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றாலும் சரியல்ல. எதிரிகள் ரூ 3,00,000 கூடுதல் வரதட்சணை கேட்ட விவரத்தை போலீசார் விசாரணையில்

சொன்னேன். 1வது எதிரிவெளிநாட்டில் இருந்து மாதம் மாதம் எனது மகளுக்கு பணம் அனுப்பி வைப்பார் என்றால் சரிதான், ஆனால் அந்த பணத்தை அவரது தாயாரிடம் கொண்டு கொடுக்க சொல்வார். எனது மகளின் வங்கி கணக்கு புத்தகம் எனது கையில் இல்லை. அந்த வங்கி கணக்கு புத்தகத்தை பார்த்தால் 1வது எதிரி எனது மகளுக்கு மாதந்தோறும் எவ்வளவு பணம் அனுப்பி வைத்தார் என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான். சாட்சி உஷா எனது மகள் என்றால் சரிதான். சாட்சி கேமாவும் எனது மகள் தான். சாட்சி பாலஸ் எனது மகளின் கணவர். சாட்சி கிருஷ்ணன், வினு எனது மகன்கள். சாட்சி செல்லம் எனது அண்ணன். சாட்சி சுசீலா எனது அக்காவின் மகள். சாட்சி டெய்சி மேரி எங்கள் ஊர் கவுன்சிலர் என்றால் சரிதான். சாட்சி ராஜசேகரன் எனது ஊரை சார்ந்தவர் என்றால் சரிதான். எனது மகள் குளச்சல் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தில் அவர்கள் நடவடிக்கை எடுக்காததால் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் மூலமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரியல்ல. நீதிமன்ற உத்தரவு படி தான் எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நாகர்கோவில், சமூக நல அலுவலகத்தில் இருந்து எங்களை விசாரணைக்கு அழைத்தார்கள் என்றால் சரிதான். சமூக நல அலுவலரின் அறிக்கை படி 8 பவுன் தங்க நகை தான் எதிரிகள் மனுதாரருக்கு கொடுக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது மகளுக்கு 2 வது திருமணம் ஜெயசீலன் என்பவருடன், 1வது எதிரிக்கும் எனது மகளுக்கும் திருமணம் நடந்து 3-4 வருடங்கள் கழிந்து எனது வீட்டில் வைத்து திருமணம் நடந்தது. எனது மகள் 2 வது கணவருடன் 1 வருடம் சேர்ந்து வாழ்ந்தார். எனது மகள் அவளது முதல் கணவரான 1வது எதிரியுடன் விவாகரத்து எதுவும் பெறவில்லை. எனது மகளுக்கு 1வது எதிரியுடமிருந்து விவாகரத்து ஆகும் முன்பே நான் ஜெயசீலன் என்பவருக்கு 2 வதாக திருமணம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். குளச்சல் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் நடந்த

விசாரணையின்போது எனது மகளும் 1வது எதிரியும் தங்களுக்குள் உள்ள கொடுக்கல் வாங்கல்களை முடித்து கொண்டதாகவும் நீதிமன்றத்தின் வழியாக விவாகரத்து பெற்று கொள்வதாகவும் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. 1வது எதிரி வெளிநாட்டில் இருந்து திரும்ப ஊருக்கு வரும் முன்பே எனது மகளுக்கும் ஜெயசீலன் என்பவருக்கும் திருமணம் நடந்தது என்றால் சரியல்ல. எனது மகளின் முதல் திருமணத்திற்கு முன்பே ஜெயசீலன் என்பவருக்கும் எனது மகளுக்கும் பழக்கம் இருந்தது என்றால் சரியல்ல. அதனால் தான் 1வது எதிரி வெளிநாட்டில் இருந்து திரும்ப ஊருக்கு வந்தபிறகு எனது மகளை நான் 1வது எதிரியுடன் அனுப்பி வைக்கவில்லை என்றால் சரியல்ல. எனது மகள் முதல் திருமணத்தில் இருந்து தன்னை விடுவித்து கொள்ளவதற்காக வரதட்சணை கொடுமை என்று எதிரிகள் மீது பொய்யாக கூறினார் என்றால் சரியல்ல. எனது மகளின் 2 வது திருமணம் இந்த வழக்கிற்கு முன்பாகவே நடைபெற்றததால் தான் உரிய நீதிமன்றம் மூலம் முதல் திருமணத்தை ரத்து செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது மகளின் திருமணத்தின் போது 1வது எதிரி 7 பவுனில் தாலி செயின் அணிவித்தார் என்றாலும், திருமண நிச்சயதார்த்ததின் போது 1 பவுனில் காப்பு அணிவித்தார் என்றாலும், பரிசு பொருள்கள் வழங்கினாா் என்றாலும் சரியல்ல. மேற்படி நகைகள் மற்றும் எனது மகளுக்கு நான் அணிவித்த நகைகள் அனைத்தையும் வைத்து தான் எனது மகளுக்கு 2 வது திருமணம் நடத்தி வைத்தோம் என்றால் சரியல்ல. எதிரிகளிடம் எனது மகளுக்கு சொந்தமான எந்த பொருள்களும் கிடையாது என்றால் சரியல்ல. 3,4,5 எதிரிகள் எனது மகளின் திருமணத்திற்கு முன்பே திருமணம் ஆகி அவரவர் கணவர் வீட்டில் வசித்து வந்தபோதிலும் அவர்களை கஷ்டநஷ்ட படுத்தவேண்டும் என்று இந்த வழக்கில் சேர்த்து நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ERANIEL.

Calendar }
Miscellaneous } C.C.No.457/2013
Preliminary Register }
Sessions }

{ Prosecution
Deposition of witness for{ Defence PW.2
{ Court

Name : திருமதி.ஹேமா

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.06.2022.

முதல் விசாரணை-

நான் கோழிபோர்விளையில் வசித்து வருகிறேன். நான் குடும்ப தலைவியாக இருந்துவருகிறேன். எதிரிகளை தெரியும். சாட்சி உஷா எனது தங்கை. அசா1 பேபி எனது அம்மா. எனது தங்கை உஷா இறந்துவிட்டார். 1வது எதிரி செல்வன் எனது தங்கையின் கணவர். 2வது எதிரி எனது தங்கையின் மாமியார். 3,4,5 எதிரிகள் எனது தங்கையின் நாத்தானார்கள். 2010 ஆம் வருடத்தில் எதிரிகள் எனது தங்கையை பெண் பார்க்க வந்தார்கள். பெண் பிடித்திருப்பதாக சொன்னார்கள். 3 இலட்சம் வரதட்சணை பணம்

கேட்டார்கள், நாங்கள் 1 இலட்சம் பணமும், 20 பவுன் தங்க நகையும் எனது தங்கைக்கு கொடுத்தோம். 1வது எதிரிக்கு 3 பவுனின் தங்க செயின் அணிவித்தோம். 1வது எதிரியின் மூத்த அக்கா ஜெயாவுக்கு 1 பவுனில் காப்பும், 4,5 எதிரிகளுக்கு தலா 1/2 பவுன் மோதிரமும் அணிவித்தோம். 1வது எதிரியின் அண்ணனுக்கு 1/2 பவுன் மோதிரம் அணிவித்தோம். வீடுகாணும் நிகழ்ச்சியின்போது ரூ 50,000 மதிப்பில் பொருள்கள் கொடுத்தோம். திருமணம் முடிந்த மறுநாளில் இருந்தே எனது தங்கையை எதிரிகள் சந்தேகப்பட்டு பேசியுள்ளார்கள். எனது தங்கை கர்பமாகி இருப்பதாக கூறியுள்ளார்கள். எனது தங்கை விருந்திற்கு எங்கள் வீட்டிற்கு வரும்போது என்னிடம் இநத் விவரத்தை சொன்னார். பின்னர் தினமும் மற்ற எதிரிகள் தூண்டிவிட்டு 1வது எதிரி எனது தங்கையை சந்தேகப்பட்டு பேசியுள்ளார். கூடுதல் பணம் வாங்கிவருமாறு எனது தங்கையை கொடுமை படுத்தியுள்ளார்கள். திருமணம் முடிந்து 3 மாதங்களில் 1வது எதிரி வெளிநாடு சென்றுவிட்டார். வெளிநாட்டில் இருந்து 1வது எதிரி மற்ற எதிரிகளின் பேச்சை கேட்டு எனது தங்கையை போன் மூலம் அசிங்கமாக திட்டி கொடுமைபடுத்தி வந்தார். வெளிநாட்டில் இருந்து 2 வருடங்கள் கழித்து 1வது எதிரி சொந்த ஊருக்கு வந்தார். சொந்த ஊருக்கு வந்தபின்னர் 3 நாள்கள் கழித்து எனது வீட்டிற்கு வந்து எனது தங்கையிடம் பணமும் நகையும் கேட்டு எனது தங்கையை அடித்து கொடுமைபடுத்தியுள்ளார். எனவே நாங்கள் எதிரிகள் மீது மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். காவல்நிலையத்தில் 1வது எதிரி எனது தங்கையின் மீது சந்தேகம் இருப்பதாகவும் தனக்கு இவள் வேண்டாம் என்றும் சொன்னார். பின்னர் காவல்நிலையத்தில் விசாரணை நடக்கும்போது நாங்கள் செல்வோம், எதிரிகள் விசாரணைக்கு ஆஜராக மாட்டார்கள். பின்னர் ஒரு நாள் காவல்நிலையத்தில் விசாரணைக்கு 1வது எதிரி ஆஜரானர், அப்போது 1வது எதிரி எனது தங்கையின் நகைகளை திருப்பி கொடுத்துவிடுவதாக எழுதி கொடுத்தார். அதன் பின்னர் நகைகள்

தரவில்லை. நாங்கள் நீதிமன்றத்திற்கு வந்தோம், வந்தபின்னர் தான் 1வது எதிரி இறந்த விவரம் தெரியும். 1வது எதிரி கொடுமை தாங்கமுடியாமல் தான் எனது தங்கை 1வது எதிரியை பிரிந்து வாழ்ந்தார். 1வது எதிரி எனது தங்கையை கொடுமை செய்ததற்கு மற்ற எதிரிகள் உடந்தையாக இருந்தனர். போலீசார் என்னை இந்த வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை-

போலீசார் என்னை குளச்சல் காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். தேதி, நாள் ஞாபகமில்லை. எனது தங்கைக்கு 2010-ம் வருடம் திருமணம் நடந்தது, தேதி மாதம் ஞாபகமில்லை. எனது திருமண தேதி, மாதம் எனக்கு தெரியும். போலீசா˚ விசாரித்தபோது எதிரிகள் 3 இலட்சம் ரூபாய் வரதட்சணை கேட்டதாகவும், நாங்கள் ரூ 1 இலட்சம் கொடுத்தாகவும் சொன்னேன். திருமணமான முதல் நாளில் இருந்தே எதிரிகள் எனது தங்கையை கொடுமைபடுத்திய விவரத்தை போலீஸ் விசாரணையில் சொன்னேன். போலீஸ் விசாரணையின் போது திருமணமான 2 நாள்களிலேயே எதிரிகள் எனது தங்கை கர்பமாகி அபார்சன் ஆகிவிட்டது என்று எதிரிகள் கொடுமைபடுத்திய விவரத்தை சொன்னேன். 1வது எதிரி வெளிநாட்டிற்கு சென்றபின்னர் போன் மூலம் எனது தங்கையை கொடுமைபடுத்திய விவரத்தை போலீஸ் விசாரணையில் சொன்னேன். எனது தங்கையின் கணவரான 1வது எதிரி வெளிநாட்டில் இருந்து ஊருக்கு வந்து 3 நாள்கள் கழித்து எனது அம்மா வீட்டிற்கு வந்து எனது தங்கையை அடித்து கொடுமைபடுத்திய விவரத்தை நான் போலீஸ் விசாரணையில் சொன்னேன். காவல்நிலையத்தில் வைத்து 1வது எதிரி எனது தங்கையின் பணத்தையும் நகையையும் திருப்பி கொடுப்பதாக எழுதி கொடுத்த விவரத்தை போலீஸ் விசாரணையில் சொன்னேன். எனது தங்கை அளித்த புகார்மனுவில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது எனக்கு தற்போது ஞாபகமில்லை. புகார்மனு கொடுக்கும்போது

நான் உடன் சென்றிருந்தேன். புகார்மனுவை காவல்நிலையத்தில் இருந்த பெண் நாங்கள் சொல்ல சொல்ல எழுதினார். எனது தங்கையின் கணவர் 1வது எதிரி 2 வருடங்கள் வெளிநாட்டில் இருந்தார். எனது தங்கை திருமணமானது 2-3 மாதங்கள் எதிரிகளுடன் சேர்ந்து வாழ்ந்தார். நான், எனது கணவர், எனது தங்கை, தம்பி ஆகியோர் 1வது எதிரி வெளிநாடு செல்லும்போது திருவனந்தபுரம் விமான நிலையம் சென்று வழியனுப்பி வைத்தோம். எனது தங்கை உஷாவும் எங்களுடன் வந்தார். அவ்வபோது 1வது எதிரி எனது தங்கைக்கு வெளிநாட்டில் இருந்து பணம் அனுப்பி வைப்பார். எனது தங்கையின் வங்கி கணக்கு புத்தகம் என்னிடம் இல்லை. அந்த வங்கி கணக்கு புத்தகத்தை பார்த்தால் 1வது எதிரி எனது தங்கையின் வங்கி கணக்கிற்கு எவ்வளவு பணம் அனுப்பிவைத்துள்ளார் என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான். எனது தங்கைக்கு 1வது எதிரியுடன் திருமணம் ஆகும் முன்பே 3,4,5 எதிரிகள் திருமணமாகி அவரவர் கணவர் வீட்டில் வசித்து வந்தார்கள் என்றால் 2 சகோதரிகளுக்கு திருமணமாகி இருந்தது. 1 சகோதரிக்கு திருமணமாகவில்லை. 3 வது சகோதரிக்கு திருமணமாகும்போது 1வது எதிரி ஊரில் இல்லை என்றால் சரிதான். 1வது எதிரியை 3 சகோதரிகளுக்கும் எனது தங்கையின் திருமணத்திற்கு முன்பே அவர்கள் அவரவர் கணவர் வீட்டில் வாழ்ந்து வந்தார் என்றால் சரியல்ல. 1வது எதிரி வெளிநாட்டில் இருந்து ஊருக்கு வந்த பிறகு எனது தங்கையை அவருடன் நாங்கள் அனுப்பி வைக்கவில்லை. 1வது எதிரி அவரது மனைவியான எனது தங்கையை அவருடன் சேர்த்து வைக்கவேண்டும் என்று கருங்கல் காவல்நிலையத்தில் புகார் அளித்த விவரம் எனக்கு தெரியாது, நான் அந்த விசாரணைக்கு ஆஜர் ஆகவும் இல்லை. சாட்சி உஷா எனது தங்கை. அசா1 எனது அம்மா. சாட்சி பாலஸ் எனது கணவர். சாட்சி 5 கிருஷ்ணன், சாட்சி 6 வினு எனது தம்பிகள். சாட்சி 7 செல்லம் எனது மாமா. சாட்சி 8 எனது உறவு முறையில் எனது அக்கா. சாட்சி 9, 10 எங்கள் ஊர் கவுன்சிலர்கள். எனது தங்கை உஷாவுக்கும் ஜெயசீலன்

என்பவருக்கும் எங்கள் வீட்டில் வைத்து திருமணம் நடைபெற்றது, தேதி மாதம் ஞாபகமில்லை. ஜெயசீலன் என்பவர் கருங்கல் பக்கமுள்ள இடையன்கோட்டை பகுதியை சேர்ந்தவர். ஜெயசீலனுக்கு எனது தங்கையை 2 வதாக திருமணம்செய்து கொடுக்கும்போது எனது தங்கைக்கும் அவரது முதல் கணவரான 1வது எதிரிக்கும் விவாகரத்து ஆகவில்லை என்றால் சரிதான். முதல் திருமணம் நிலுவையில் இருக்கும்போது 2 வது திருமணம் செய்தால் குற்றம் என்று எனக்கு தெரியாது. நான் 7-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது தங்கை ஜெயசீலன் என்பவருடன் 1 வருடகாலம் வாழ்ந்தார். அவர் பிரசவத்தின்போது ஏற்பட்ட பிரச்சனையால் இறந்துவிட்டார். எனது தங்கைக்கு 1வது எதிரியுடன் திருமணம் நடப்பதற்கு முன்பாகவே எனது தங்கைக்கும் ஜெயசீலன் என்பவருக்கு தொடர்பு இருந்து வந்தது என்றால் சரியல்ல. 1 வது எதிரி வெளிநாட்டில் வசித்து வரும்போதே நாங்கள் எங்கள் தங்கையை ஜெயசீலன் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தால் தான் 1வது எதிரி வெளிநாட்டில் இருந்து வந்த பிறகு நாங்கள் அவருடன் எனது தங்கையை அனுப்பவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் எனது தங்கையின் முதல் திருமணத்தை நாங்கள் விவாகரத்து செய்ய முன்வரவில்லை என்றால் சரியல்ல. எனது தங்கையின் திருமணத்தின் போது 1வது எதிரி 7 பவுனில் தாலி செயின் அணிவித்தார் என்றாலும், திருமண நிச்சயதார்த்ததின் போது 1 பவுனில் காப்பு அணிவித்தார் என்றாலும், பரிசு பொருள்கள் வழங்கினாா் என்றாலும் சரியல்ல. மேற்படி நகைகள் மற்றும் எனது தங்கைக்கு அணிவித்த நகைகள் அனைத்தையும் வைத்து தான் எனது தங்கைக்கு 2 வது திருமணம் நடத்தி வைத்தோம் என்றால் சரியல்ல. அதனால் தான் போலீசார் எனது தங்கை அளித்த புகார்மனுவின் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனவே நாங்கள் நீதிமன்றம் மூலம் எதிரிகள் மீது முதல்தகவல் அறிக்கை பதிவு செய்ய மனு தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. எனது தங்கை முதல் திருமணத்தில் இருந்து தன்னை

விடுவித்து கொள்ளவேண்டி வரதட்சணை கொடுமை என்று எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. குளச்சல் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்படுவதற்கு முன்பு 1வது எதிரியும் எனது தங்கையும் அவர்களுக்குள் உள்ள கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து கொண்டதாகவும் நீதிமன்றம் மூலம் விவாகரத்து பெற்று கொள்வோம் என்றும் எழுதி கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகளிடம் எனது தங்கைக்கு சொந்தமான எந்த பொருள்களும் இல்லை என்றால் சரியல்ல. 3,4,5 எதிரிகள் எனது தங்கையின் முதல் திருமணத்திற்கு முன்பே திருமணமாகி அவரவர் கணவர் வீட்டில் வாழ்ந்து வந்தபோதிலும் அவர்களை கஷ்டப்படுத்துவதற்காக பொய்யாக இந்த வழக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது தங்கை குளச்சல் அனைத்து மகளில் காவல்நிலையத்தில் தாக்கல் செய்த புகார்மனுவில் வழக்கு பதிவு செய்ய எந்த முகாந்திரமும் இல்லாததால் போலீசார் வழக்கு பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் நீதிமன்றம் மூலம் வழக்கு பதிவு செய்ய மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனது தங்கையின் திருமணத்தின்போது எதிரிகளுடன் பணம் கொடுக்கும் போது உடன் செல்லவில்லை. அதனால் அந்த பணம் யாரிடம் கொடுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி எதிரிகளிடம் பணம் கொடுத்ததற்கான எந்த புகைப்படமும் நாங்கள் கொடுக்கவில்லை. நாங்கள் வெளிநாட்டில் இருந்து 1வது எதிரி வந்து எனது தங்கையை அடித்தற்கு புகார்மனு அளித்தற்கான ஏற்பு சான்றிதழ் எதுவும் போலீசாரிடமிருந்து பெறப்பட்டதா என்றால் போலீசார் என்னிடம் தரவில்லை. போலீசா் சிகிச்சைக்காக எனது தங்கையை மருத்துவமனைக்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். நான் எனது தங்கைக்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது அம்மா வீட்டைசுற்றிலும் அக்கம் பக்கத்தில் வீடுகள் உள்ளது என்றால் சரிதான், அவர்களிடம்

கேட்டால் உண்மை விவரம் தெரியும் என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடக்காததால் தான் அக்கம் பக்கத்தினர் எதுவும் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.